6. 1966–67-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்காக மானியக் கோரிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1966–67-ம் ஆண்டில் சில மானியங்களின் கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டதாகத் தெரியவந்ததால், அம் மிகைச் செலவினங்களை ஈடு செய்வதற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மன்றத்தின்முன் வைக்கவேண்டி முன் வந்துள்ளேன்.

இந்த மிகைச் செலவினங்களை ஆய்வு செய்த 1969-70-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர், 1966–67-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுக் கணக்குகள் பற்றிய தங்கள் அறிக்கையின் 19-வது பத்தியில் அவ்வறிக்கையின் 1-ம் இணைப்பில் கண்டுள்ளபடி, மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அளிக்கும்படி பரிந்துரைத்தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிவுரைக்கிணங்க, 1966–67-ம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடு செய்யும் வகையில் மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 4,05 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

இவற்றைக் கூறி, 1966-67-ம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

7. 1970-71-ம் ஆண்டிற்கான முதல் துணை நிதி அறிக்கை—அளித்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1970–71-ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் எழுந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்குகின்ற விரிவான விவர அறிக்கை யொன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாயாகும். இதில் ஒரு கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற்படும். இத் துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள திட்டங்கள் பெரும்பாலும் புதுப் பணித் திட்டங்களேயாகும். இவைகளுக்கு நடப்பாண்டிற்குரிய வரவு–செலவுத் திட்டம் சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. இத்துடன், வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட சில திட்டங்களுக்காக சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற விழைகின்றேன்.